National
Redress Scheme
For people who have experienced
institutional child sexual abuse

தகவல் ஏடு

# ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தை அணுகிப் பெறுவதற்கான இலவச ஆதரவுதவி

‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ என்பது (18 வயதுக்குட்பட்ட) சிறு பராயத்தில் நிறுவன ரீதியான பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்தவர்களுக்கானதாகும்.

## விண்ணப்பிப்பதற்காக எத்தகைய உதவியை நீங்கள் பெறலாம்?

நீங்கள் குறைதீர்வுக்காக விண்ணப்பிப்பது பற்றி யோசிப்பதாயின், விண்ணப்பிப்பதற்கு முன்பும், விண்ணப்பிக்கும் போதும், அதன் பின்பும் உங்களுக்கு உதவக்கூடிய ஆதரவுதவிச் சேவைகள் உள்ளன.

'குறைதீர்ப்பு ஆதரவுதவிச் சேவை' என்பது, அதிர்ச்சி அனுபவங்களைப் பற்றிய விபரங்களை நன்கு அறிந்ததும், கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பானதும் மற்றும் அதிர்ச்சி அனுபவத்திலிருந்து மீண்டவர்களை மையமாகக் கொண்டதுமான ஒரு சேவையாகும். ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்தைப் புரிந்துகொள்ளவும், உங்கள் உணர்வுகளைப் பற்றிப் பேசவும் மற்றும் விண்ணப்பச் செயல்முறை நெடுக உங்களுக்கு வழிகாட்டவும் அவர்களால் உதவ முடியும்.

ஒரு குறைதீர்ப்பு வழங்கீட்டிற்கு விண்ணப்பிப்பது மற்றும் அதனை ஏற்றுக்கொள்வது மற்றும் உங்கள் தனிப்பட்ட நிதி விடயங்களை அது எவ்வாறு பாதிக்கலாம் போன்றன பற்றிய ஆலோசனைகளை வழங்க சட்ட மற்றும் நிதி உதவி சேவைகளும் உள்ளன.

இச் சேவைகள் அனைத்தும் இலவசமானதும், அந்தரங்கமானதும், சுயாதீனமானதுமாகும்.

**www.nationalredress.gov.au** -ஐப் பார்வையிடுவதன் மூலமோ, ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தை **1800 737 377** இல் அழைப்பதன் மூலமோ உங்கள் பகுதியில் உள்ள ஆதரவுதவிச் சேவைகளை நீங்கள் கண்டறியலாம்.

## ஒரு நம்பகமான நபரிடமிருந்து உதவி பெறல்

தேசிய குறைதீர்ப்புத் திட்டத்’ துடன் உங்கள் சார்பாகப் பேசவோ அல்லது செயல்படவோ ஒரு ‘குறைதீர்ப்பு உதவி சேவை’ யையோ அல்லது நீங்கள் நம்பும் வேறு ஒருவரையோ நியமனதாரராக நீங்கள் அமர்த்திக்கொள்ளலாம். நீங்கள் ஒரு நியமனதாரரை அமர்த்த விரும்பினால், அவர் ஒரு ஒரு ‘குறைதீர்ப்பு நியமனதாரர் படிவத்தை’ நிரப்ப வேண்டும்.

நியமனதாரர்கள் பற்றி மேலும் தெரிந்துகொள்ளவும் மற்றும் 'குறைதீர்ப்பு நியமனதாரர்' படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும் செல்க: www.nationalredress.gov.au

## மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி

மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரது உதவியைப் பெற, ‘**TIS நேஷனல்**’-ஐ **131 450** என்ற இலக்கத்தில் அழைத்து, ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தை 1800 737 377 என்ற இலக்கத்தில் அழைக்குமாறு கேட்கவும்.